**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 24/2021</u>**

நாள் 10.06.2025

PW1 – கே.கணேசமூர்த்தி

த/பெ – லேட். பெரிய கருப்புசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of June 2025.)**

**<u>2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் 14.12.2020–ம் தேதியில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை எனக்காகவும், 1 முதல் 3 வாதிகளுக்கும் நானே நடத்தி வருகிறேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 3 வாதிகள் வழக்கு நடத்த இந்த நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் அவர்களை ஆஜராக செய்கிறேன். நன் 5–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கம்பெனி வேலைக்கு செல்கிறேன். நில புரோக்கராகவும் இருந்து வருகிறேன். 3–ம் வாதி ராஜேந்திரன் எனது அண்ணன். அவரும் கம்பெனி வேலைக்கு சென்று வருகிறார். வாதிகளாகிய நாங்கள் எல்லோரும் சேர்ந்து தாவா சொத்தைப் பொறுத்து 23.12.2015–ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 11.06.2020–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் பற்றிய விபரம் தெரிந்து தான் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. நாங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2–ல் கண்ட சொத்திற்கு 1–ம் பிரதிவாதி பழனிச்சாமி பெயரில் தான் பட்டா எண்.1063 இருந்துள்ளது என்றால் சரிதான். 22.10.2020–ம் தேதியில் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய

அறிவிப்பிலும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் 1–ம் பிரவிதாதி பெயரில் ஏற்பட்டுள்ளதை குறிப்பிட்டு சொல்லியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். அந்த சட்ட அறிவிப்பிற்கு 1–ம் பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தெரிவித்து பதில் போட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியும். அந்த பதிலுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ள கணினி பட்டாவை கண்ட சர்வே எண். 319/3 –க்கு பட்டா எண்.1376 என்று 2,3 பிரதிவாதிகள் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்கிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் 3–ம் வாதி ராஜேந்திரனின் மனைவியின் மருத்துவம் சம்பந்தமாக மருத்துவ ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் 1–ம் பிரதிவாதியிடம் இருந்து ரூ.6,00,000/– ஐ கடனாக தான் பெற்றுக்கொண்டோம் என்பதை காட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வா.சா.ஆ.11 வில்லங்க சான்று இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அதனால், தாவா சொத்தின் பேரில் ஏற்பட்டுள்ள வில்லங்க ஆவணங்கள் பற்றிய விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதியிடம் இருந்து சொத்தை கிரையம் பெற்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான், 15 நாட்கள் கழித்து தெரிய வந்தது.

3. நான் 1–ம் பிரதிவாதியிடம் சென்று தான் சொத்தை திருப்பி எழுதிக்கொடுக்குமாறு கேட்டேன். 2,3 பிரதிவாதிகளிடம் சென்று நான் கேட்கவில்லை. நான் சொல்லும் செல்போனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 01.06.2020–ம் தேதி வரையில் 1–ம் பிரதிவாதிக்கு நான் வட்டி கொடுத்து வந்தேன் என்பதற்கான ஆவணம்

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான் தான் உரிமையாளர் என்று விளம்புகை பரிகாரம் எதுவும் நான் கோரவில்லை என்றால் சரிதான். 2015–ம் ஆண்டுவாக்கிலேயே 1–ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா எண்.1063 என்று பட்டா ஏற்பட்டுள்ள விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். அந்த பட்டாவை ரத்து செய்ய நான் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் நிலபுரோக்கராக தொழில் செய்து வரும் நிலையில் வழக்கு தாக்கல் செய்யும் விபரங்கள் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். அதனால், நாங்கள் 2015–ம் ஆண்டில் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்திற்கு எதிராக 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்யாமல் காலம் கடந்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் உரிய மறுபயன் கொடுத்து 1–ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்று தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் தான் தற்போது வரையில் அனுபவித்து வருகிறோம் என்பதை தகாட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள CD with pendrive வா.சா.ஆ.9 ஆனது 2,3 பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டி நானும், 1–ம் பிரதிவாதியும் ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 பற்றிய விபரம் எதுவும் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.10–ல் எந்த தேதியில் என்னுடைய செல்போனில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றும், எந்த தேதியில் சான்று வழங்கப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் அது எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.10–ஐ போட்டோ ஸ்டியோவில் உள்ள ராஜீ என்பவர் தான் கொடுத்தார். நான் சொல்வது போல ராஜீ என்பவர் வா.சா.ஆ.10 சான்றை

கொடுக்கவில்லை என்றும், நாங்களே பொய்யாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் உரிய மறுபயனை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை 1–ம் பிரதிவாதிக்கு 23.12.2015–ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரத்தை எழுதி பதிவு செய்து கொடுத்து விட்டோம் என்று சொன்னால் சரிதான், கடனுக்காக தான் எழுதி கொடுத்தோம். நாங்கள் கடனுக்காக தான் 1–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை எழுதி கொடுத்தது பொய் என்றும், சொத்திற்குரிய மறுபயனை பெற்றுக்கொண்டு தான் பதிவு கிரையம் கொடுத்தோம் என்றால் சரியல்ல. அதனால், நாங்கள் இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றும், இந்த வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2015–ம் ஆண்டில் இருந்து தாவா சொத்தை நாங்கள் அனுபவித்து வந்தது கிடையாது என்றால் சரியல்ல. அதனால் இந்த தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR Digitally signed by C SENTHIL KUMAR Date: 2025.06.10 15:28:45 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**